1975 அக்டோபர் 25]

திரு. கே. என். குமாரசாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னுர்கள். இன்னும் பல எஸ்டிமேட்கள் நிறுத்தப் பட்டிருக்கின்றன, சாங்ஷன் செய்யப்படாமல் நிறுத்திவைக்கப் பட்டிருக்கின்றன, அந்த எஸ்டிமேட்களை நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? காரணம் பணம் இல்லையென்று சொல்கிருர்கள், ஆகவே அவற்றையெல்லாம் விரைவிலே நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நிறுத்திவைக்கப்பட்டதன் காரணத்தை கனம் அங்கத்தினர் அவர்களே குறிப்பிட்டிருக் கிருர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஏற்கனவே கொடுக்கப்பட்ட வாக்குறுதியை இந்த அரசு பூர்த்தி செய்யாது என்று சொன்னுர்கள். வட ஆற்காடு மாவட்டம் மட்டுமல்ல, தமிழகத்தில் பெரும்பாலும் கேணிகளும், ஏரிகளும், இத்தகைய குட்டைகளும் தான் நீர்ப் பாசனத்திற்குப் பயன்படுகின்றன. தண்ணீர் அளிக்கிற சப்ளை சேனல்களையெல்லாம் ஆக்கிரமித்துக் கொள்கிருர்கள், இதன் காரணமாக வட ஆற்காடு மாவட்டத்தில் ஏராளமான குட்டைகள் தண்ணீர் இல்லாமல் வாடிக்கொண்டிருக்கின்றன. அங்கங்கே செய்திருக்கிற ஆக்கிரமிப்புகளைத் தவிர்ப்பதற்கு இந்த அவசர நிலை நேரத்திலாவது துரித நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது புதிய குட்டைகளை அமைப்பதைப்பற்றிய கேள்வி. ஏரிகளை, குளங்களை, குட்டைகளை ஆக்கிரமிப்புச் செய்திருந்தால் யார் ஆக்கிரமிப்புச் செய்திருந் தாலும் அகற்றப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக் கிறது.

புலியூர் வாய்க்காலைப் புதுப்பித்தல்

*54 வினு—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டத்தில் உள்ள புலியூர் வாய்க்காலைப் புதுப்பிக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

[1975 அக்டோபர் 25

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திருச்சி மாவட்டத்திலுள்ள அமராவதி நதிப்பாசனத்தைச் சேர்ந்த புலியூர் வாய்க்காலைப் புதுப்பிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, தற்பொழுது அனைத்து வேலைகளும், 30—6—1975-ம் தேதியுடன், முடிக்கப்பட்டு விட்டன.

கூட்டுறவு நூற்பு ஆலைகள்

*** 55 வினா—திரு. கி. ஜெயராமன்** : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பு ஆலைகளில் கதிர்களை (spindles) அதிகப்படுத்த அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. கி. ஜெயராமன் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் அண்மையில் சிட்டு நூல் தயாரிக்கின்ற கூட்டுறவு நூற்பு ஆலைகளில் 50 ஆயிரம் கதிர்கள் ஏற்படுத்தக்கூடிய முறையிலே திட்டம் வகுத்து இருக்கிறது. சேலம் கூட்டுறவு நூற்பாலை போன்ற ஆலைகளில் அப்படி கொண்டுவருவதற்கு நம்முடைய அரசு மத்திய சர்க்காரின் அனுமதியைப் பெறுவதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அனுமதி பிரச்னையில்லை. அதற்கான நிதியைப் பெற என்.சி.டி.சி. இன்னும் புதிய கொள்கையை வகுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதிகக் கதிர்கள் போடும்போது அதிக உதவித் தொகை வேண்டுமென்று நாம் என்.சி.டி.சி.-யைக் கேட்டுவருகிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : மினி மில்கள் என்று சொல்லப்படுகின்ற மில்கள் குறைந்த கதிர்கள் கொண்டதாக உள்ளவை. நல்ல முறையில் நடத்தப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது, இப்போது ஆந்திர மாநிலத்திலேயும், கர்நாடக மாநிலத்திலேயும் மினி மில்கள் அமைக்கப்படவிருக்கின்றன. அங்கே அமைக்கப்படவிருக்கின்ற மினி மில்களைப் போல் இங்கேயும் நெசவாளர்கள் உள்ள பகுதிகளில் மினி மில்களை அமைத்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்க முடியுமே. அதனைப்பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி, இருக்கின்ற நூற்பாலைகளைப்பற்றி.